844
24/6/70

செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

University of Jaffna Sri Lanka
RECEIVED
8
Periodicals Division
Library

இல: 1063 | 1970 ஜூன் 23 செவ்வாய்க்கிழமை ★ விலை சதம் 5

## பிரதமர் ஸ்ரீமாவுக்கு மனு

# செல்விபோலின்குரூஸ் றோயல் கமிஷன் கேட்கிறார்



செல்வி போலின்

கோத்தாபயு கிரம்பகந்த கொலை வழககல மரண தண்டனை விதிக்கப் பட்ட 23 வயுதான செல்வி போலின் குரூஸ் தனது வழக்கை மறுபரிசிலனை செய்வதற்கு றோயுல் கமிஷன் நியுமிப்பதற்கு அங்கிகாரம் அளிக்கும்படி பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு மனுச் செய்துள்ளார்.

பதினொரு வயது சிறுவனை கோத்தாபய கிரம்பக்கந்தவை இரத்மலானையில் ஒரு கோயில் தோட்டத்தில் உள்ள கிணற்றில் தள்ளிக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் செல்வி போலீன் குரூஸுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டது தெரிந்ததே!

"நமது தாய் கிருபை கூர்ந்து எனது பணிவான மன்றாட்டை கேட்பார்" என்று செல்வி போலீன் தனது மனுவில் நம்பிக்கை தெரிவித்து உள்ளார்.

"தங்கள் நன்றியுள்ள பிரஜை" என்று செல்வி போலீன் தனது மனுவை முடித்துள்ளார். (ஐ)

## டெவ்லினுக்கு சிறை வாசம் அப்பீல்நீதிமன்றம்ஊர்ஜிதம்

பெல்பாஸ்ட், வட அயர்லாந்து, ஜூன் 22

பிரிட்டிஷ் எம். பி.க்களில் வயதில் மிகவும் குறைந்தவரான செல்வி பேர்னடெட் டெவ்லினுக்கு குழப்பம், விளைவித்த குற்றத்துக்காக விதிக்கப்பட்டு இருந்த சிறைத் தண்டனையை எதிர்த்து அவர் செய்திருந்த அப்பீல் மனு இன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து பிரிட்டனின் உயர் நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்வதற்கு அவரது வழக்கறிஞர் மனுச் செய்துள்ளார்.


மனு பரிசீலனையில் இருக்கும் வேளையில் 23 வயதான செல்வி டெவ்லின் மீண்டும் வெள்ளிக்கிழமை வரை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில் செல்வி டெவ்லின் மீண்டும் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டு நான்கு தினங்களுக்குள் வட அயர்லாந்து அப்பீல் நீதிமன்றம் இன்று இந்தத் தீர்ப்பை வழங்கியது.

கடந்த வருடம் நடைபெற்ற குழப்பங்களில் பங்குபற்றியதற்காக செல்வி டெவ்லினுக்கு ஆறு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது.

இன்று காலை தனது அப்பீல் மனுவின் தீர்ப்பை அறிவதற்கு வந்த செல்வி டெவ்லின் சிகப்பு நிற தோலாலான மினி ஆடை அணிந்திருந்தார். தனது பெருவிரலை உயர்த்திக் காட்டிவிட்டு அவர் நீதி மன்றத்தின் உள்ளே போனார்.

வட அயர்லாந்து பிரதம நீதியரசர் மெக்டமட் பிரபு இந்த அப்பீல் மனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்கள் அடங்கிய தீர்ப்பை 45 நிமிட நேரம் வாசித்தார். அப்போது, செல்வி டெவ்லினின் முகத்தில் சற்று வாட்டம் காணப் பட்டது. (ஐ)



செல்வி டெவ்லின்

## பாடசாலை மாணவர்கள் செய்யவேண்டியது என்ன?

ஒரு பாடசாலை வைபவமாகக் கருத முடியாத கொண்டாட்டங்களில் பாடசாலை மாணவர்களைப் பங்குபற்ற விடக் கூடாது என்று கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் அறிவித்து உள்ளார்.

பாடசாலை நேரசூசியின்படி வகுப்பறைகளிலோ, விளையாட்டு மைதானங்களிலோ தங்கள் வேலைகளில் ஈடுபட வேண்டிய மாணவர்கள் பல்வேறு மனிதர்களை வரவேற்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட வைபவங்களின் போது அல்லது இதை ஒத்த வைபவங்களில் தெருவில் பேராய் வெய்யிலில் அணிவகுப்பது ஏற்றதல்ல என்றும் அவர் தெரிவித்து உள்ளார்.

பாடசாலை மாணவர்கள் தேசிய அல்லது கல்வித்துறை முக்கியத்துவம் வாய்ந்த வைபவங்கள் எதிலும் கலந்துகொள்ள வேண்டும் என்று அரசாங்கம் விரும்பினால், தேவைப்படும் போது ஏற்ற உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மஹ்மூத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் இந்த விஷயத்தில் கண்டிப்புடன் நடந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மந்திரி தெரிவித்திருக்கிறார். (ஐ)



என்னுங்க, ஆஸ்பத்திரியில் இல்லாத மருந்து வீதியிலே கிடைக்குதாமே!

ஆமாங்க, அங்குள்ள இரண்டு கால் எலிகள் அவற்றை வீதிக்குக் கவ்விக் கொண்டு வந்திருக்கலாம்!

## பொலீஸ் அதிபர் ஓய்வு பெறுகிறார்

பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபேய குணவர்தன பதவியில் இருந்து ஓய்வு பெறும் நிமித்தம் அடுத்த முதலாம் திகதி முதல் லீவில் செல்கிறார்.

புதிய ஐ. ஜீ. பி.யாக திரு. எஸ். டி. சேனநாயக்கா நியமிக்கப் படுவார் என பொலீஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

## சுகார்னோ பூதவுடல் அடக்கம்

ஜகர்த்தா, ஜூன். 22

காலஞ் சென்ற இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகார்னோவின் பூதவுடல் சகல ராஜாங்க மரியாதைகளுடனும் அடக்கம் செய்யப்பட்டது.

அரசாங்க அதிகாரிகளும், பிரமுகர்களும் ஆயிரக் கணக்கில் குழுமி இருந்து மறைந்த தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## அமைச்சர் பேச்சு வார்த்தை

விவசாய சாதனங்களின் விலைகளைக் குறைப்பதுபற்றி நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா பேச்சு வார்த்தை நடாத்திவருகின்றார்.

பன்மடங்காகப் பெருகியிருக்கும் விவசாய சாதனங்களின் விலை ஏற்றத்தால் விவசாயிகள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளனர். இக் கஷ்டத்தைப் போக்கவே அமைச்சர் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

(மறு 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாங்கேணி கிராமத்தில் இப்படி ஒரு சம்பவம்

# அண்ணன் மனைவி தம்பிக்கு தம்பி மனைவி அண்ணனுக்கு

### இன்ப வாழ்க்கையை நாடி ஜோடி ஊரைவிட்டு ஓட்டம்

ஓட்டமாவடி, ஜூன். 22

ஒரே வீட்டில் வாழ்க்கை நடத்திவந்த அண்ணன் தம்பி இருவர் அண்ணனின் மனைவியை தம்பியும், தம்பியின் மனைவியை அண்ணனுமாக மாற்றிக்கொண்ட சம்பவமொன்று கோறளைப்பற்று காரியாதிகாரி பிரிவிலுள்ள மாங்கேணி என்ற கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

அன்னையின் வீட்டில் வசித்து வந்த இந்த அண்ணன் தம்பி இருவரில் ஒரு குழந்தைக்குத் தாயான அண்ணனின் மனைவி மீது தம்பிக்கு அளவற்ற காதலாம்.

இதைப் போலவே அண்மையில் மணமுடித்த தம்பியின் இளம் மனைவிமேல் அண்ணனுக்கும் அளவற்ற ஆசை.

தனது புத்திரர்களின் பொல்லாத காதலைப் புரிந்துகொண்ட அந்தப் புத்திசாலித்தாய் உறவினர்களின் பூரண சம்மதத்துடன் மக்களை அழைத்து மனைவிமாரை மாற்றிக் கொள்ளச் செய்து தனிக் குடித்தனம் செய்ய வேறிடத்திற்கு வாழ்த்திப் போற்றி வழியனுப்பி வைத்தாளாம்.

அண்ணனின் மனைவியைப் பெற்ற தம்பியும், தம்பியின் மனைவியைப் பெற்றுக்கொண்ட அண்ணனும் இன்ப வாழ்க்கைக்காக இடமாறிச் சென்ற போது உறவினர்களும் ஊரவரும் ஜோடி மாற்றத் தம்பதிகளை குரவையிட்டு வெடிகொழுத்தி உற்சாகமாக வழியனுப்பி வைத்தனராம். (236)

### இறப்பதற்கு முன் தன் மகளை முத்தமிட்டார் சுஹார்னோ

ஜகார்த்தா, ஜூன். 22

தனது கணவர் இறப்பதற்கு முன்னர் தனது மூன்று வயது மகள் கார்டிபாவை முத்தமிட்ட சம்பவத்தை காலஞ்சென்ற சுஹார்னோவின் மூன்றாவது மனைவி அழுதுகொண்டே பத்திரிகை நிருபர்களிடம் கூறினர்.

அவர் பத்திரிகை நிருபர்களிடம் பின்வருமாறு சொன்னார்.

"பாரிஸில் இருந்து எனது குழந்தை கார்டிபாவுடன் அவசரமாகத் திரும்பி இருந்தேன். அவருடைய படுக்கை அறைக்குள் சென்றபோது, எனது கையை மெதுவாகப் பிடித்தார்.

"பின்பு மகள் கார்டிபாவை முத்த மிட்டார். அவர் அப்பொழுது எதுவும் கதைக்கவில்லை. ஆனால் கார்டிபாவை அடையாளம் கண்டிருப்பார் என்று நம்பினேன்"

இவ்வாறு சுஹார்னோவின் மனைவி கூறினர். (5)

### கூப்பன் மோசடிக்காரர் மீது கடும் நடவடிக்கை

தமக்குச் சொந்தம் அல்லாத பிறருடைய அரிசிக் கூப்பன் புத்தகங்களை வைத்திருப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன தீர்மானித்துள்ளார்.

பெருந்தொகையான அரிசிக் கூப்பன் புத்தகங்கள் இப்படியாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக அமைச்சருக்குக் கிடைத்த புகார்களைத் தொடர்ந்தே அமைச்சர் இந்த நடவடிக்கை எடுக்க முனைந்துள்ளார்.

ஒரு சிலர் சிறு தொகைக்கு இப் புத்தகங்களை அடைவு வைப்பதால், இது ஒரு வியாபாரமாகவும் நடந்து வருகிறது.

பிறருடைய அரிசிக் கூப்பன் புத்தகங்களை வைத்திருப்பவர்களைப் பற்றிய தகவல்களைப் பொது மக்கள் தமக்கு அறிவித்தால் தாம் தகுந்த நடவடிக்கை எடுக்க முடியுமென்று திரு. இலங்கரத்ன கூறியுள்ளார்.

பொது மக்களுக்குக் கொடுக்கப்பட்ட கூப்பன் புத்தகங்கள் மாற்றார் கையில் இருப்பதாகக் கிடைக்கும் புகார்களை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று நாட்டிலுள்ள கிராம சேவகர்கள் அனைவரும் கேட்கப்பட்டுள்ளார்கள்.

வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அரசாங்க அதிபர்களுக்கு இது சம்பந்தமான உத்தரவுகளை உடன் அனுப்ப விருக்கிறார்.

## காலஞ்சென்ற சோமபாலா வின் தலையில்

## பொலீஸ் அதிகாரி அடித்ததை கண்டேன்

"காலஞ்சென்றவருக்குப் பிறகால் பொலீஸ் அதிகாரி ஒருவர் வருவதைக் கண்டேன். பின்னர் அவர் தனது கையில் இருந்த தடியால் காலஞ்சென்றவரின் தலையில் அடித்தார்"

புஞ்சி பொரளையைச் சேர்ந்த தொலம்பகே சோமபாலா என்பவரின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின் போது மருதானை மூன்றாவது டிவிஷனைச் சேர்ந்த ஏ. எஸ். ஈ. கிங்ஸ்லி என்பவர் சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு சொன்னார்.

ஜூன் 16-ம் திகதி இரவு 8-00 மணி அளவில் புஞ்சி பொரளையில் உள்ள சமசமாஜக் கட்சியின் காரியாலயத்தின் முன்னால் நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட காயம் காரணமாக சோமபாலா மரணமானார்.

சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்ட இடத்தில் பல பொலீஸார் ஜனக் கூட்டத்தைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பொரளைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு உதவி இன்ஸ்பெக்டரும் 17 கான்ஸ்டபிள்களும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

சோமபாலாவின் மரணம் சம்பந்தமாக மாநகரசபை மாஜிஸ்திரேட் திரு. ஆர். நவரத்தினம் விசாரணை செய்த சமயம் சாட்சியான திரு. கிங்ஸ்லி மேலும் கூறியதாவது:

"புஞ்சி பொரளையில் உள்ள சமசமாஜக் கட்சிக் காரியாலயத்துக்கு நான் தினமும் செல்வது வழக்கம். சம்பவதினம் காரியாலயத்துக்கு முன்னால் சோமபாலாவைச் சந்தித்தேன்.

"சோமபாலாவுடன் கதைத்துக் கொண்டிருந்த சமயம் பொலீஸ் வான் ஒன்று சந்திக்கு அருகில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்தது. மற்றொரு பொலீஸ் வண்டியும் அப்பொழுது அங்கு வந்து காரியாலயத்துக்கு முன்னால் நின்றது. சுமார் 15 பொலீஸ்காரர்கள் கட்சிக் காரியாலயத்தை நோக்கி வந்தார்கள்.

"அப்பொழுது சோமபாலாவுக்குப் பின்னால் ஒரு பொலீஸ் அதிகாரி வந்தார். தன்னுடைய கையில் இருந்த தடியால் சோமபாலாவின் தலையில் அடித்தார். நான் பயத்தினால் அங்கிருந்து சென்றுவிட்டேன்"

இவ்வாறு சாட்சி கூறினர்.

மருதானை வீதியைச் சேர்ந்த ஜோர்ஜ் அலெக்சாண்டர் பொய்ஸ் என்பவர் சாட்சியம் அளிக்கையில் பின்வருமாறு சொன்னார்:

"புஞ்சி பொரளையில் உள்ள சமசமாஜக் காரியாலயத்துக்கு அருகில் நான் வசிக்கிறேன். சம்பவ தினம் இரவு சாப்பாட்டுக்குப் பின்னர் வீதிக்கு வந்தேன். அப்பொழுது சமசமாஜக் கட்சிக் காரியாலயத்துக்கு முன்னால் பொலீஸ் வான் ஒன்று வந்து நின்றது.

"பொலீஸ் வானுக்கு அருகில் சென்றபோது, என்ன வேண்டும் என்று பொலீஸார் கேட்டனர். உடனே அருகில் இருந்த கடைக்குச் சென்றேன். அப்பொழுது இரு பொலீஸ்காரர்கள் நந்தசேன என்பவரைத் தாக்கினர். பின்னர் பொலீஸ் வானை நோக்கி அவரை இழுத்துச் சென்றனர். சோமபாலா தாக்குப்பட்டதை நான் காணவில்லை"

மருதானை 3-ம் டிவிஷனைச்சேர்ந்த எம். கே. டேவிட் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:

"சாப்பாட்டுக்காக வீதிச் சந்திக்கு வந்தேன். லங்கா சமசமாஜக் கட்சியின் காரியாலயத்தைக் கடந்து சென்ற சமயம், எங்கே போகிறாய் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் என்னைக் கேட்டார்.

"பின்னர் அவர் எனது சேர்ட்டைப் பிடித்து இழுத்து வாயில் அடித்தார். சாப்பாட்டுக்குப் போகிறேன் என்று நான் கூறியும் கேட்காமல், என்னைப் பொலீஸ் வானை நோக்கி இழுத்துச் சென்றார்.

"நான் நீதி அமைச்சரின் அலுவலகத்தில் வேலை பார்ப்பதாக அப்பொழுது அவர்களிடம் கூறினேன். அப்பொழுது பொலீஸார் என்னைத் திட்டியதுடன், எங்கு வேலை செய்தாலும் தமக்கு அக்கறை இல்லை என்று கூறினர்.

"அவர்கள் என்னைத் தடியால் அடித்துப் பின்னர் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். பின்னர் சிகிச்சை பெறுவதற்காக பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன்"

இவ்வாறு சாட்சி கூறினர்.

மேலும் இருவர் சாட்சியம் அளித்த பின்னர் மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை அடுத்த நாளுக்கு ஒத்தி வைத்தார். (5)


### நிறுத்துவதற்கு வழி

அரசாங்க ஆஸ்பத்திரிகளிலிருந்து விலை உயர்ந்த அரிய மருந்துகள் அங்காடி வியாபாரிகளிடம் எப்படிப் போய்ச் சேர்கின்றன? நிச்சயமாக நாலுகால் எலிகளால் இந்தத் தொழிலைச் செய்து கொள்ள முடியாது. எனவே ஆஸ்பத்திரிகளில் இம் மருந்துகளைக் கையாள வேண்டியவர்கள் அல்லாத மற்றும் ஊழியர்கள் இம் மருந்துகளைத் தொடாதிருக்குமாறு தடை செய்தால் இம் மோசடி நின்றுவிடும். இன்னும் பொலீஸாரும் அங்காடி வியாபாரிகள் மீது சிறிது கடைக்கண் நோக்கம் செய்தால் இந்த அநியாயத்தை முற்றாகத் தடுத்து விடலாம்.

தந்தி


### சட்ட வைத்திய அதிகாரி மீது கோர்ட்டில் விசாரணை

கண்டி, ஜூன். 22

சட்ட வைத்திய அதிகாரியின் இரத்தப் பரிசோதனை அறிக்கையையிட்டு மனுதார் தெரிவித்த சந்தேகத்தின் பேரில், அச் சட்ட வைத்திய அதிகாரி கோர்ட்டில் விசாரிக்கப்பட்டார்.

மெட வலயைச் சேர்ந்த சயாத்து அல்லது சோமா தலாநாயக்கா என்னும் பெண் தனக்கும் தன் பிள்ளைக்கும், போகம்பரை சிறைச்சாலையைச் சேர்ந்த சரத் விதானகேயிடமிருந்து தாபரிப்புக் கோரியிருந்தார்.

இவ்வழக்கு முன்பு விசாரிக்கப்பட்ட போது, அப்பிள்ளைக்குத் தான் தந்தையல்லவென்றும் இரத்தப் பரீட்சை நடாத்தும் படியும் விதானகே கேட்டிருந்தார்.

இரத்தம் பரிசோதிக்கப்பட்டு முடிவில், விதானகே அப்பிள்ளையின் தந்தையாக இருக்க முடியாது என வைத்திய அறிக்கை தெரிவித்தது. இதை மனுதார் ஆட்சேபித்து வைத்திய அதிகாரியை கோர்ட்டுக்கு அழைத்திருந்தார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. தாமோதரம்பிள்ளை சாட்சியமளிக்கையில், தான் இரத்தத்தை எடுத்த போதிலும் இரத்தப் பரிசோதனை அதிகாரி தான் அதை பரீட்சித்தார் எனக் கூறினர்.

திரு. ரஞ்சித் ரணராஜா (மனுதார் வழக்கறிஞர்): இரத்தப் பரீட்சை சரிவர நடைபெறவில்லையென்பதே எமது வாதம்.

திரு. உடுரவான (எதிர் மனுதாருக்காக): இரத்தப் பரிசோதனை அதிகாரி தான் வைத்திய அறிக்கை சமர்ப்பிப்பது வழக்கம்.

திரு. ரணராஜா: ஐயா, வைத்திய அதிகாரி பரிசோதிப்பார் என்பதுதான் எமது நம்பிக்கை. எதிர் மனுதார் கண்டி சிறைச்சாலை ஜெயில் காட் என்பதால் நாம் யோசிக்கிறோம்.

திரு. உடுராவன: ஐயா, மனுதாரை கங்கொடவிலையில் இருந்து தான் சென்ற முறை கோட்டிற்கு கூட்டி வந்தனர். அவள் ஒரு நடமாடும் விபசாரி.

திரு. ரணராஜா: ஐயா, பரீட்சை நடத்திய முறையில் எமக்குத் திருப்தியில்லை.

நீதவான் மேல் விசாரணையை ஆகஸ்ட் 30-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (-15)

### நாடு காக்கும் நிதி சேகரிப்பு

ஓட்டமாவடி, ஜூன். 22

நாட்டின் நிதி நிலைமையைச் சீர்படுத்தும் பொருட்டு ஐக்கிய முன்னணி அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள "நாடு காக்கும் நிதி"க்கு கல்குடாத் தொகுதி முஸ்லிம் கிராமங்களிலிருக்கும், பல பொதுஸ்தாபனங்களும், சமூக நல சங்கங்களும், நிதி சேகரித்து அனுப்புவதற்கான முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. (236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றுமே கணவன் மனைவியாக வாழவில்லை

# பல்கலைக்கழக மாணவி விவாகரத்துக் கோரல்

கண்டி, ஜூன். 22

பேராதனை பல்கலைக்கழக மாணவி ஒருவர் அதே பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர் ஒருவரிடமிருந்து விவாகரத்துக் கோரி, கண்டி மாட்ட நீதிபதி திரு. சி- பி- வல்கம்பயா முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

சம்பந்தப்பட்ட மாணவர் இருவரும் என்றுமே கணவன் மனைவியாக வாழ்ந்ததில்லை என்று விசாரணையின் போது கூறப்பட்டது.

கட்டுகாஸ்தோட்டை, பள்ளேமுல்ல வளவைச் சேர்ந்த, 22 வயதான நந்தகுமாரி ரம்புக்வெல்ல என்னும் அழகிய மாணவி, கோந்தெனியாவைச் சேர்ந்த ஜயதிலக்க பண்டா தென்னக்கூன் என்னும் பல்கலைக்கழக மாணவனிடமிருந்து, வேண்டுமென்றே பிரிந்திருந்தார் என்ற காரணங்காட்டி விவாகரத்து கோரியுள்ளார்.

எதிர் மனுதார் விவாகரத்துக்கு விரும்பவில்லை.

மனுதாரான நந்தகுமாரி சாட்சியமளிக்கையில், "நான் பல்கலைக்கழக மாணவி. முன்பு இருவரும் நுகவெல மத்திய மகா வித்தியாலயத்தில் படிக்கும் பொழுது சிநேகமானோம். எதிர் மனுதார் முதலில் பல்கலைக்கழக மாணவரானார். நான் பின்பு சேர்ந்தேன். நான் இராமநாதன் மண்டபத்திலும், எதிர் மனுதார் மார்க்கஸ் பெர்னண்டோ மண்டபத்திலும் வசித்தோம்.

"1968 மே மாதம் 16-ம் திகதி காரில் கண்டிக்குப் போகும் பொழுது, திருமணப் பதிவு செய்ய வேண்டுமென்று கூறினர். பெற்றோருக்குத் தெரியாமல் திருமணப் பதிவு செய்வதால் எனக்கு சந்தோஷமில்லை. ஆனல் தனியாக விருந்தமையால் மறுக்க முடியவில்லை. விசேட லைசென்ஸ் மூலம் திருமணப் பதிவு முடிந்தது.

"பின் இருவரும் திரும்பி எங்கள் விடுதிகளில் தங்கினேம். பல்கலைக்கழக வளவில் சந்திப்போம்.

"எனது பெற்றோருக்கு ஒரு பாடம் படிப்பிப்பதற்காகத் தான் அப்படி திருமணப் பதிவு செய்ததாகவும், விரும்பிய நேரம் விவாகரத்து செய்வதாகவும் கூறினர்.

"ஆகஸ்ட் 17-ல் பல்கலைக்கழக விடுமுறைக்காக வீடுவந்தேன். ஆகஸ்ட் 25-ல் வீடுவந்து என்னைத் தன்னுடன் அனுப்பும்படியும் அலது கையிலுள்ள தோட்டா முடியும் என என் தாயாரைப் பயமுறுத்தினர். இது சம்பந்தமான வழக்கு பின் சமாதானமாக்கப்பட்டது.

"பின் ஒரு சமயமும் என்னைப் பயமுறுத்தினர். இதனல் கணவன் மனைவியாக நான் வாழ விரும்பவில்லை. என்றுமே கணவனும் மனைவியுமாக வாழவுமில்லை" என்று கூறினர்.

எதிர் மனுதாரான தென்னக்கூன் சாட்சியமளித்த பின், ஜூன் 29-ம் திகதி தீர்ப்பு வழங்குவதற்காக, வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (15)

## இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் கமிட்டி கூடுகிறது

ஸ்ரீ மா — சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்தும், இலங்கை — இந்திய அதிகாரிகளின் கூட்டுக் கமிட்டி இம்மாதம் 29-ம் தேதி கொழும்பில் கூடி பேச்சுவார்த்தை நடாத்த இருக்கிறது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்றபின் பிரஸ்தாப கமிட்டி அன்றைய தினமே முதல் முறையாகக் கூடுகிறது.

இந்திய கோஷ்டியின் சார்பில் இலங்கையிலுள்ள உதவி தூதுவர் திரு. பி. கே. எஸ். மேனன், இந்திய தூதரகத்தின் முதலாவது செயலாளர் (அரசியல் பிரிவு) திரு. போதிராஜ் ஆகியோரும் இலங்கையின் சார்பில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு அதிகாரி திரு. டபிள்யூ. ரி. ஜயசிங்கா, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் உதவி செயலாளர் திரு. ரி. பி. எம். எக்கநாயக்கா ஆகியோரும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வர்.

ஸ்ரீமாவோ — சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்படி கூட்டுக் கமிட்டி ஒழுங்காகக் கூடி இரு நாடுகளும் ஒப்பந்தத்தை எவ்வாறு அமுல் செய்கின்றன என்பது பற்றி ஆராய்ந்து இருக்க வேண்டும். எனினும் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் மேற்படி கமிட்டியின் கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறவில்லை.

கூட்டுக் கமிட்டியினரின் மேற்படி பேச்சு வார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்றும், புதிய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதிபலிப்புகள் இந்தப் பேச்சு வார்த்தையில் இடம்பெறலாம் என்றும் அந்த அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தந்தி நிருபரிடம் தெரிவித்தார்.

## காதல் சரசமாடப் போன காதல் மன்னன் பட்டபாடு

திருகோணமலை, ஜூன். 22

பகல் நேரத்தில் காதல் புரியச் சென்ற நவீன "காதல் மன்ன"னுக்கு கத்தி வீச்சுத்தான் பரிசாகக் கிடைத்தது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: இங்குள்ள ஒரு கிராமத்தில் வாழும் இக் "காதல் மன்னன்" சம்பவதினம் ஓய்வில் இருந்தாராம். மனம் கிளுகிளுப்பான சூழ்நிலையை விரும்பியது.

அருகில் இருந்த வீட்டை நினைத்தார். அச்சமயம் பகல் நேரம் என்றும் அவர் பார்க்கவில்லை. அந்த வீட்டில் ஒரு மங்கை தனியே வசித்து வந்தாள். கவர்ச்சி நிரம்பிய மங்கை நடுத்தர வயதுடையவள்.

காதல் மன்னன், அவ்வீட்டினுள் நுழைந்தார், கற்பனை செய்தபடி.

அப்போது மதியபோசனம் முடித்த அப்பெண் தனது அருகிலே கத்தி ஒன்றை வைத்தபடி நன்ருக அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தாள்.

உள்ளே நுழைந்த காதல் மன்னனுக்கு அவள் படுத்து இருந்த நிலை பல எண்ணங்களைத் தோற்றுவித்தது.

பெண்ணின் அருகிலே மெதுவாக அமர்ந்து கொண்டு, அவளைத் தலையில் இருந்து கால்வரை நோட்டம் விட்டாராம். தூங்கும் பெண்ணை தட்டி எழுப்பினல் என்ன என்று ஒரு முறை யோசித்தார். பின்னர், அருகில் இருந்த தண்ணீர் வாளியில் இருந்து சிறிது நீரை எடுத்துப் பெண்ணின் முகத்தில் தெளித்தாராம்.

திடுக்கிட்டு எழுந்த பெண், தனது அருகில் பாதுகாப்பாக வைத்து இருந்த கத்தியை எடுத்து பயத்தில் வீசினளாம்.

இப் "புது" தாக்குதலை எதிர் பார்க்காத காதல் மன்னன், கையை கொடுத்து கத்தி தலைக்கு வருவதைத் தடுத்தாராம். பலன் காதல் மன்னன் கைகளில் விரல்கள் வெட்டப்பட்டனவாம். இரத்தம் பெருக்கெடுத்தோடியது,

தற்பொழுது அக் காதல் மன்னன் சிகிச்சைபெற்று வருகின்ருராம். (287)

## தெற்கிலிருந்து வடக்கே செல்லும் சிரமதானக் குழு

தெல்லிப்பளை, ஜூன் 22

மக்கள் அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர், சிரமதான பணிக்குழுக்களின் முதலாவது பரிமாற்றம் விரைவில் நடைபெற இருக்கின்றது.

இந்த முதலாவது பரிமாற்றத்தின் அடிப்படையில் தென்னிலங்கை முற்போக்கு வாலிபர் இயக்கங்களின் தொண்டர் குழு ஒன்று சிரமதான வேலையில் ஈடுபட யாழ்ப்பாணத்துக்கு வரும்.

பின்தங்கிய கிராமங்களில் மக்கள் போக்கு வரத்து செய்ய முடியாது இருக்கும் வீதிகளைச் செப்பனிடுவதே இத் தொண்டர்களின் முதல் வேலையாக இருக்கும். வட பிரதேச கம்யூனிஸ்ட் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் இக்குழு இயங்கும்.

மாவிட்டபுரத்தை அடுத்த கலட்டி என்ற பகுதியில் உள்ள தெல்லிப்பளை கிராம சபைக்குச் சொந்தமான வீதி ஒன்றைச் செப்பனிடுவது மூலம் இவர்களின் சிரமதானப் பணி ஆரம்பிக்கப்படும்.

இச் சிரமதான வேலைகள் பூர்த்தியடைந்ததும் அவ் வீதிக்கு "பொன். கந்தையா வீதி" என பெயர் சூட்டப்பட இருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை மாவிட்டபுரம் கலட்டி கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. சிதம்பரம் கதிரவேலன் தலைமையிலான குழு செய்து வருகிறது.

## விசாரணை நடக்கிறது

நாடாளுமன்ற இலிகிதர் ஒருவர் பட்டதாரி ஒருவருக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி ரூ. 2,500, கைலஞ்சம் வாங்கினர் என்ற புகாரை அடுத்து, இலஞ்சக் கமிஷனர் திணைக்களம் இதுபற்றிய புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளது. (15)

## நஞ்சு அருந்திய வாலிபர் வாந்தி எடுத்துச் சாவு

"சத்தம் ஒன்று கேட்டது அப்பொழுது எனது இளைய சகோதரர் எனது கழுத்தைப் பற்றியவாறு "பெரிய அண்ணு நான் முடிந்து விட்டேன்" என்று சொன்னர்.

"கிருமிநாசினி மணம் வீசியதால் என்ன நடந்தது என்று அவரிடம் விசாரித்தேன். நஞ்சு அருந்திவிட்டதாக அவர் அப்பொழுது பதில் அளித்தார்."

பி. எம். சுலரத்ன (20) என்ற இளைஞரின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையின் போது கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த மஹிந்த பண்டார என்பவர் மேற்கண்டவாறு கூறினர்.

சாட்சி மேலும் சொன்னதாவது:– "காலஞ்சென்றவர் தனது இளைய சகோதரர். சில வருடங்களுக்கு முன்னர் தகப்பனுர் காலமாகி விட்டார்.

"தகப்பனுர் காலமானது தொடக்கம் காலஞ்சென்றவர் என்னுடன் வசித்து வந்தார். சம்பவ தினத்துக்குச் சில வாரங்களுக்கு முன்னர் அவர் மனம் உடைந்த நிலையில் காணப்பட்டார்.

"சம்பவதினம் வீட்டில் வேலையில் ஈடுபட்டிருந்தேன். ஏதோ சத்தம் கேட்டது. காலஞ் சென்றவரின் அறைக்குச் சென்றபோது அவர் ஓடிவந்து எனது கழுத்தைப் பிடித்தார். "நான் முடிந்து விட்டேன்" என்று அவர் கூறிய பின்னர் வாந்தி எடுக்க ஆரம்பித்தார்.

"அயலவர்களின் உதவியுடன் அவரைக் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன்" என்றும் கூறினர்.

விசாரணை முடிவில், மரண விசாரணை அதிகாரி திரு. லஷ்மண் கருணரத்ன தற்கொலை என்று தீர்ப்பு அளித்தார். (5)


## மணிப்புரி சாரிகள்



"மணிப்புரி" சாதியைச் சேர்ந்த மிக விலை உயர்ந்த சாரிகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும். அழகான கண்கவர் சித்திர வேலைகளைக் கொண்ட இச்சாரிகள் நீங்கள் விரும்பும் எல்லா வர்ணங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். கைதேர்ந்த சித்ரக் கலைஞர்களாலும், வல்லுநர்களாலும் இந்திய கலாபவனத்தில் நடாத்தப்பெற்ற சித்திரக் கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மனங்கவரும் சித்திர வேலைப்பாடுகளே இச் சாரிகளில் பொருந்தியுள்ளன.

ஒரு சாரியின் விலை ரூபா 29–50 மாத்திரமே.
ஒவ்வொரு சாரியுடனும் ஒரு சட்டைத் துணியும் கவர்ச்சியான ஒரு பிரேஸியரும் இலவசமாக அனுப்பப்படும்.
தபால் செலவு இலவசம்.

இது சாயம் மாறுது நீண்ட காலம் பாவிப்பதோடு எந்தவொரு சவர்க்காரத்திற்கும் தரம் மாருதது. ஸ்திரிக்கை செய்ய வேண்டியதில்லை. இதன் அழகான தரமும், குன்ருத தோற்றமும் உங்கள் மேனியழகை மென்மேலும் அழகுறச் செய்கின்றது. எனவேதான் இதனைப் பிரபல நடிகைகளும் அணிகின்ருர்கள்.

பாடசாலைகளுக்கும் வேண்டிய உற்சவங்களுக்கும் ஏற்ற இந்த சாரியை வாங்குவதற்கு இன்றே நீங்கள் விரும்பும் நிறத்தைக் குறிப்பிட்டு ஒரு தபாலட்டை மூலம் தெரிவிக்கவும். வி. பி. பி. VPP. மூலம் அனுப்பி வைக்கப்படும். (பிரேஸியர் அளவுகளை அனுப்புங்கள்.) தயவு செய்து உங்கள் விலாசத்தை தெளிவாக எழுதுங்கள்.

The Manager
**ANESCO AGENCIES, (TH)**
191/1, High Level Road, Kirillapone Colombo 6.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 55 வயதுடன் அரசாங்க ஊழியர் கட்டாய ஓய்வு

## மந்திரிசபை எடுத்த முடிவு

ஐம்பத்தைந்து வயது நிரம்பிய சகல அரசாங்க ஊழியர்களும் கட்டாயமாக ஓய்வு பெற வேண்டும்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அரசாங்க ஊழியர்களின் ஓய்வு காலம் பற்றிய சுற்றறிக்கை ஒன்றை பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சு சகல நிரந்தர காரிய தரிசிகளுக்கும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் விரைவில் அனுப்பிவைக்கும்.

மந்திரி சபையில் நேற்று நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு—

★ தொழிற் சங்க நடவடிக்கைக்கான சட்ட திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்துவது சம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு மந்திரி சபை உப குமிட்டி ஒன்று நியமிக்கப்படும்.

★ அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவது பற்றிய இறுதி முடிவு அடுத்த மந்திரி சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

★ திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் காலியாக இருக்கும் 35,000 வெற்றிடங்களை நிரப்புவது பற்றி அமைச்சர்கள் விரைவில் முடிவு செய்வார்கள்.

★ "லேக் ஹவுஸ்" பத்திரிகை நிறுவனம் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக அடுத்த சில தினங்களில் ரோயல் கமிஷன் ஒன்று நியமிக்கப்படும்.

★ அரசியல் சட்ட விவகார அமைச்சராக டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நியமிக்கப்படுவார். தோட்ட தொழில் அமைச்சராகவும் இவர் தொடர்ந்து கடமை ஆற்றுவார்.

★ முன்னைய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட 18 தேங்காய் கொள்வனவு நிலையங்களை மூடிவிட வேண்டும். இந்தக் கொள்வனவு நிலையங்களில் கடமை ஆற்றுவதற்காக தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட ஊழியர்களின் பதவிகளும் காலியாகும்.

★ முன்னைய அரசாங்கத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை சுவீகரித்தல். இது சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மூன்று அமைச்சர்களைக் கொண்ட உப குமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. காணி விவசாய அமைச்சர், தோட்டத் தொழில் அமைச்சர், உள் நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஆகிய மூவரும் இக் குமிட்டியில் அடங்குவர்.

(ம–5)

## காங்கேசன்துறை வருமாறு ஸ்ரீமாவோவுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன், 22

பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும், அமைச்சரவையைச் சேர்ந்த மற்றும் ஏழு அமைச்சர்களுக்கும் காங்கேசன்துறையில் பிரமாண்டமான பொது வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அண்மையில் நடைபெற்ற காங்கேசன்துறைப் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டத்திற்கு பட்டினசபையின் தலைவர் திரு. கு. ஜெயபாலசிங்கம் தலைமை வகித்தார்.

பிரதமரையும், அமைச்சர்களையும் வரவழைத்து, பிரமாண்டமான உபசார விழா நடத்துவதற்கான பிரேரணையை தலைவர் திரு. ஜெயபாலசிங்கமே முன் மொழிந்தார். 5-ம் வட்டார உறுப்பினர் திரு. வி. இரத்தினராசா பிரேரணையை வழிமொழிய அது ஏகமனதாக நிறைவேறியது.

சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:–

"அண்மையில் நடந்தேறிய பொதுத் தேர்லில் பொதுமக்களின் அமோக ஆதரவைப் பெற்று அரசாங்கம் அமைத்துள்ள ஐக்கிய முன்னணியின் தலைவியும், பிரதம மந்திரியுமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையும், மற்றும் அமைச்சர்களான திருவாளர்கள் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர் கெனமன், பி. பி. ஜீ. கலுகல்ல, ஜோர்ஜ் ராஜபக்ச, செ. குமாரசூரியர், ஜனாப் பதியுதீன் மஹ்மூத் ஆகியோரையும் காங்கேசன் துறைக்கு அழைத்து அவர்களுக்கு பொது வரவேற்பு அளிப்பதென இச்சபை தீர்மானிக்கின்றது.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரவேற்பு அளிக்க வேண்டும் என்று சென்ற வார இறுதியில் நடைபெற்ற யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. பிரதமரை இங்கு அழைக்காமல், அவர் வரும்போது மட்டுமே மாநகரசபை வரவேற்பு அளிக்க வேண்டும் என தமிழரசுக் கட்சி எம். எம். சி. திரு. சி. நாகராசா (முன்னாள் மேயர்) இதற்கு திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார். திருத்தப் பிரேரணையே சபையில் நிறைவேறியது,

(5)

## கணவருடன் சண்டையிட்டு மரக்கிளையில் தொங்கல்

வேறொரு பெண்ணுடன் கள்ள நட்புக் கொண்டிருப்பதாகத் தனது கணவனை ஏசிவிட்டு வீட்டை விட்டுச் சென்ற இளம் பெண் ஒருத்தி, காட்டு மரம் ஒன்றில் தூக்குப் போட்டுத் தொங்கிக் கொண்டிருக்கக் காணப்பட்டாள்.

டப்ளியூ. எச். பேமாவதி (21) என்ற பெண்ணின் மரணம் சம்பந்தமாக பொம்பரிப்புபத்து மரண விசாரணை அதிகாரியான திரு. எஸ். எம். பொடி சிங்கோ, விசாரணை நடத்திய போது மேற் கூறப்பட்ட தகவல்கள் வெளிவந்தன.

காலஞ்சென்றவர் தனது கணவருடன் கோபித்துக் கொண்டு வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற ஏழாவது தினத்தில் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

காட்டில் விறகு வெட்டுவதற்குப் போன ஒருவர் சடலத்தை முதலில் கண்டார். அவர் பொலீஸுக்கு முறைப்பாடு கொடுத்த போது பொலீஸார் விசாரணை செய்து அது காணமற்போன பேமாவதியின் சடலம் என்று கண்டு பிடித்தனர்.

சடலம் கண்டு பிடிக்கப்பட்ட சமயம் மிகவும் அழுகிய நிலையில் இருந்தது.

மரண விசாரணை அதிகாரி விசாரணை நடத்திய போது காலஞ்சென்ற பெண்ணின் கணவரான என். எம். மில்ட்டன் என்பவர் சாட்சியம் அளித்தார்.

அவர் சொன்னதாவது:–"மனைவி காணமற் போன தினத்தில் வழமை போல் புத்தளத்துக்கு வேலைக்குச் சென்றிருந்தேன்.

"நான் வேலை செய்யும் டிராக்டர் பழுதடைந்திருந்தபடியால் அன்று காலை 9–00 மணியளவில் வீடு திரும்பியிருந்தேன். அப்பொழுது, நான் பெண்களோடு திரிவதாக எனது மனைவி சத்தமிட்டார். இதன் பின்னர் தனது மகளையும் அழைத்துக் கொண்டு அவர் வீட்டை விட்டுச் சென்றார்.

"உடனடியாகச் சென்று திருப்பி அழைத்து வந்தேன். பின்னர் பகல் 12–30 மணி அளவில் பேமாவதி வீட்டை விட்டுச் சென்று விட்டதாக எனது சகோதரி கூறினர். வீட்டில் அவரைத் தேடிப் பார்த்தேன். மகள் மாத்திரம் காணப்பட்டாள்."

இவ்வாறு சாட்சி கூறினர்.

மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினர்.

(–5)

## சலுசல நிர்வாகத்தில் பல சீர்கேடுகள் கண்டுபிடிப்பு

தீர்செய்ய முடியாத குழப்பமான சூழ்நிலையில் லங்கா சலுசலவின் முந்திய நிர்வாகத்தினர் அதனை விட்டுச் சென்றுள்ளதாக அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வருமுன் சலுசல ஸ்தாபனத்தின் நிர்வாகத்தை நடத்தி வந்தவர்கள் பல மோசடிகளையும், தில்லுமுல்லுகளையும் நடத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சலுசலவின் புதிய நிர்வாகம் நியமித்த குமிட்டியின் அந்த அறிக்கைப்படி, சலுசலவை சீராக இயங்கச் செய்வதற்கு இன்னும் பலமாத காலம் ஆகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முந்திய நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் பலர் சலுசல பணத்திலிருந்து பெருந்தொகை கடன் எடுத்திருக்கிறார்கள். ஆனல் திரும்பக் கொடுக்கவில்லை. ஸ்தாபனத்தின் கணக்கு வகைகள் சரியாக பதிவு செய்யப்படவில்லை. ஜவுளி விநியோகத்தில் பல மோசடிகள் நடைபெற்றுள்ளன,

இவை போன்ற இன்னும் பல சீர்கேடுகள் பொதுத் தேர்தலுக்கு சமீபமாகவே நடந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## முறைப்பாட்டுக்காரர் ஒரு அதிசயப் பெண்மணி

முறைப்பாட்டுக்காரர் ஒரு அதிசயப் பெண்மணி. மனதில் வருவதை எல்லாம் அவர் பேசுவார். மத்துகாமம் பொலீஸுக்கு அவர் அளித்திருந்த முதலாவது முறைப்பாட்டில், தான் எதிர் மனுதாரரால் கடத்தப்பட்டுக் கற்பழிக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனல் பொலீசார் தொடர்ந்து விசாரணை செய்த போது முறைப்பாட்டுக்காரர் ஐந்து மாதக் கர்ப்பிணி என்பதைக் கண்டு பிடித்தனர். முறைப்பாட்டுக்காரரின் புகாரின்படி அவர் சில நாட்களுக்கு முன்னரே கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மத்துகாம் மாஜிஸ்திரேட் திரு. நிஸங்கா வீரரத்ன முன்னிலையில் நடைபெற்ற தாபரிப்பு வழக்கு ஒன்றில் எதிர் மனுதாரர் சார்பில் மேற்கண்டவாறு கூறப்பட்டது.

இந்த வழக்கில் கடுகஹஹென்னவைச் சேர்ந்த எச். ஏ. திலகவதி என்பவர் முறைப்பாட்டுக்காரர்.

ரஞ்சித் குணவர்த்தன என்பவரிடம் இருந்து தாபரிப்புக் கோரி இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தார். (5)

## அந்தக் குடை அங்கே உண்டு

கொழும்பு புறக்கோட்டை நிர். 85/7, மத்திய வீதியிலுள்ளவரின் டாக்ஸியில் நேற்றுத்தினம் பயணம் செய்தவர்கள் யாரோ, தங்களுடைய குடையொன்றை அந்த டாக்ஸிக்குள் விட்டுச் சென்று விட்டனராம். அக்குடை மேற்குறிப்பிட்ட இடத்தில் இருக்கின்றதாம். உரியவர் போய் அடையாளத்தைச் சொல்லிப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அந்த டாக்ஸிச் சாரதி "தந்தி"க்குத் தெரிவித்துள்ளார்.

## நில்வள கங்கையில் வெள்ளம்

அக்குரஸ்ஸ, ஜூன் 22

நேற்று முன்தினம் இப் பகுதியில் தொடர்ந்து பெய்த பெரும் மழை காரணமாக நில்வள கங்கை திடீரெனப் பெருக்கெடுத்தோடியது.

நில்வள கங்கையின் நீர்மட்டம் சுமார் 12 அடி வரையில் உயர்ந்துள்ளது. நேற்றும் இன்றும் போக்கு வரத்துக்கள் நடைபெறவில்லை. தபால் விநியோகம் நடைபெறவில்லை.

(3)

## இ. போ. ச. டைரக்டர்கள்

இ. போ. சபையின் டைரக்டர்களாகப் புதிதாக ஐவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருவாளர்கள் ஜே. வீரமன், பேர்ஸி எதலியகொட, டி. ஜே. ஆர். திஸநாயக்கா, கே. டபிள்யூ. சொய்சா, எச். டி. சி. விஜயசிங்கா, இ. போ. ச. வின் தலைவர் திரு. அனில் முனசிங்கா என்பது தெரிந்ததே (5)

## விவசாயிக்கு பதில் 'ஹலோ கேர்ல்'

டெலிபோன் பாவனையாளர்களே உங்கள் வசம் உள்ள டெலிபோன் டிரக்டரியின் முன்பக்க அட்டையில் நெல்லுக் கட்டுடன் நிற்கும் விவசாயினுடைய படம் விரைவில் நீக்கப்பட இருக்கிறது.

குறிப்பிட்ட அந்தப் படத்திற்குப் பதிலாக "ஹலோ கேர்ல்" என்று எல்லோராலும் அழைக்கப்படும் டெலிபோன் இயக்கும் வாலைக்குமரியின் படம் ஒன்று இடம்பெறும் எனத் தெரிகின்றது.

தபால், தந்திச் சேவைத் திணைக்களம் இதுபற்றி முடிவு செய்திருக்கின்றது. இத்துடன் 6 மாதங்களுக்கு ஒருமுறை புதிய டெலிபோன் டிரக்டரிகளை வெளியிடுவதென்றும் பிரஸ்தாப திணைக்களம் தீர்மானித்துள்ளது. (3)

இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு – 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 23 ஜூன் 1970.

Thanthi 5, Gunasena Mawatha, Colocmbo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org